**உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டம் -2018**

---

உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 யூன் 29 ஆம் திகதிய 2477 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு, 2009 யூன் 29 ஆந் திகதிய 0129/0130 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க மற்றும் 2013 பெப்ரவரி 13 ஆந் திகதிய 2977 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கைகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

---

செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மன்னார், வவுனியா, புத்தளம் மற்றும் சிலாபம் மாவட்டங்களலுள்ள நகர மக்களின் பௌதீக நலன்களை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த கிரயம் ரூபா 19,165 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 163.33 மில்லியனானதுடன் அதில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா 11,809 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 99.78 மில்லியன் கடனாக வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,649 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23.22 மில்லியன் மானியமாக வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. நெதர்லாந்து நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (என்ரீஎவ்) நீர் நிதியளிப்பு பங்குபற்றல் வசதியிலிருந்து ரூபா 228 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2 மில்லியன் மானியமாக ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக வழங்குவதற்கும் உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதியாக இருக்கின்ற ரூபா 4,479 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 38.33 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 நவம்பர் 13 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறானினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2018 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான

வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது | 135.13 | அரசாங்க பங்களிப்பின் குறைத்துக் கூறல் | செலுத்தப்பட்ட வற் அரசாங்க நிதிக்கு எதிராக சரிசெய்யப்பட முடியும் | இலங்கை அரசாங்கத்திடம் இருந்தான மொத்த பங்களிப்புகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 வரை கடனளிக்கும் முகவரால் அறவிடப்பட்ட வட்டிக் கட்டணங்கள் செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 404.10 | -மேற்படி- | இது நிதி அமைச்சின் செலவினமாக கருத்தப்படடுள்ளது. ஆகவே, கணக்கிற்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டு இறுதியில் கைதவிர்ப்புகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

செயற்திட்டமானது நீர் துறை அபிவிருத்தி மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் வடக்கு மற்றும் வட மேல் பிராந்தியங்களில் நீர் துறை நிறுவனங்களை வலுப்படுத்தல் போன்ற கூறுகளின் கீழ் நகர மக்களைப் போல பௌதீக ரீதியாக முன்னேற்றும் நோக்கில் வடக்கு மற்றும் வட மேல் மாகாணங்களில் பல்வேறு நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களை அமுலாக்குகின்றது.

| நடவடிக்கை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம்<br>இலக்கு | <br>அடையப்பட்டது | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| **கூறு – 01- நீர் துறை அபிவிருத்தி மற்றும் சுகாதார உட்கட்டமைப்பு** | | | | | |
| பிரதான பரிமாற்ற மற்றும் விநியோக முறைமைக்கான குழாய்கள், பொருத்திகள் மற்றும் வால்புகள் வழங்கி பொருத்துதல் | | | | | |
| • வவுனியாவில் பரிமாற்ற வழிகளின் குழாயிடல் | 24 கிமீ | 19 கிமீ | தரங்குறைந்த குழாய்கள் 2016 இல் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறைபாடுடைய குழாய்களை மீள பொருத்துவதற்கான கால நீடிப்பின் சாத்தியம் | தரக்காப்பீட்டு பொறிமுறையை முன்னேற்றுவதற்கான தேவை. |
| • மன்னாரில் எழுத்தூர் முதல் பேசாலை வரை பரிமாற்ற வழிகளின் குழாயிடல் | 16 கிமீ | இல்லை | 2018 செப்தெம்பர் 18 இலேயே ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் 2018 திசெமபர் 31 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. | பூர்த்தியாக்கலில் உள்ள தாமதத்தால் தொடர்புபட்ட கிரயங்கள் அதிகரிக்கும் | வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • சிலாபம் முதல் புத்தளம் வரை விநியோக வழிகளின் குழாயிடல் | 48.9 கிமீ | இல்லை | -மேற்படி- | செயற்திட்ட காலப்பகுதியை விட பின்னால் வேலைகளை பூர்த்தியாக்குதல் சாத்தியம் | -மேற்படி- |
| **கூறு-02- வடக்கு மற்றும் வட மேல் பிராந்தியங்களில் நீர் துறை நிறுவனங்களை வலுப்படுத்தல்** | | | | | |
| சோலார் பனல் மற்றும் சீசீரீவீ முறைமை வழங்கி பொருத்துதல் | 02 கூறுகள் | இல்லை | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | வவுனியா மாவட்டத்தில் பேரு ஆற்று நீர் தேக்கத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியிலிருந்து கழிவு வெளியேற்றும் குழாய்கள் வழங்கி பொருத்துதலின் ஒப்பந்தம் 2017 ஏப்ரல் மாதத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 சனவரி 18 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. செயற்திட்டமானது 2018 நவம்பர் 25 வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்த பொதிலும் உரிய வேலைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் பூர்த்தியாக்கப்பட்டிருக்வில்லை. | செயற்திட்ட காலப்பகுதி இறுதி வரையும் வேலைகள் பூர்த்தியாக்கப்படாது இருந்தது. | உரிய ஒப்பந்தத்தின் கீழான வேலைகள் 2019 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நுழைவு வீதிகள் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளின் தாமதத்திற்கான காரணங்களை ஆய்வு செய்வதற்கும் உரிய தரப்பினரை இனங்காண்பதற்கும் வேண்டப்பட்டது. |
| (ஆ) | ரூபா 598.93 மில்லியன் கிரயத்தில் 2013 இல் வழங்கப்பட்ட தண்ணீர் பரிமாற்ற மற்றும் விநியோக முறைமை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 06 தடவைகள் ஒப்பந்த காலப்பகுதி நீடிக்கப்பட்ட பின்னரும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி யாக்கப்படாமல் இருந்தது. ஒப்பந்தகாரர் ஒப்பந்த காலப்பகுதி நீடிப்பதற்கு அனுமதி பெற்றுக் கொள்ளாமல் 2018 திசெம்பர் 31 இன் பின்னரும் வேலைகளை தொடர்ந்திருந்தார். ஒப்பந்தகாரர் தரமற்ற குழாய்கள் வழங்கியிருந்தார் என்று மேலும் அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் மாற்றீட்டு நோக்கங்கள் அடையப் பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகாரர் 2019 மே மாத இறுதிவரையும் வேலைகளை தொடருவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். | செயறடதிட்ட நடவடிக்கைகளின் தாமதத்திற்கான காரணங்கள் ஆய்வு செய்வதற்கு வேண்டப்பட்டுள்ளது. |
| (இ) | செயற்திட்டமானது ரூபா 313.94 மில்லியன் கிரயத்தில் 2018 செப்தெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் 07 | மேலதிக கிரயம் ஏற்படும் சாத்தியம் | மேலதிகமாக நீடிக்கப்பட்ட குழாயிடல்கள் பாராளுமன்ற மற்றும் | செயற்திட்ட காலப்பகுதிக்குள் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கான |

| | |
|---|---|
| புதிய ஒப்பந்தங்களை வழங்கியிருந்ததுடன் அவற்றில் எவ்வித பௌதீக முன்னேற்றமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக் கப்படவில்லை. அதில், மன்னாரில் விநியோக முறைமைக்கான குழாய்கள் வழங்கி பொருத்தவதற்கான ஒப்பந்தம் 2018 நவம்பர் 27 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதியை கருத்தில் கொள்ளாமல் 2019 பெப்ரவரியில் பூர்த்தியாக்குவதற்கு உடன்பட்டிருந்தனர். | மாகாணசபை தேவை. உறுப்பினர்களால் வேண்டப்பட்டுள்ளது. |

**3.3 விதிவிலக்கான நடவடிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் களனி அலுவலகத்திற்கு ரூபா 1.2 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி அச்சீட்டு உபகரணம் கையளிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்ட நிதிகளை தவறாக பயன்படுத்தல் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | செயற்திட்டத்தின் உள்ளபடியான தேவைகளை இனங்காணப்பட வேண்டும். |

**3.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| நிலத்தடி நீர் தேக்கம் மற்றும் இறைக்கும் இல்லம் என்பவற்றின் நிர்மாண நோக்கத்திற்காக செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட புத்தளத்தில் இருக்கின்ற சுத்திகரிப்பு பொறிக்கு இணைக்கின்ற 03 ஏக்கர் காணி 02 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | காணி தவறாக பயன்படுத்தும் சாத்தியம் | இருக்கின்ற சுத்திகரிப்பு பொறி புனரமைப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டது. | செயற்திட்டமானது அர்த்தமுள்ள நோக்கங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்ட காணியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |